මුදල් අමාත්‍යාංශය
நிதி அமைச்சு
MINISTRY OF FINANCE

මහලේකම් කාර්යාලය, කොළඹ 01, ශ්‍රී ලංකාව.
செயலகம், கொழும்பு 01. இலங்கை
The Secretariat, Colombo 01. Sri Lanka

කාර්යාලය / அலுவலகம் / Office: (94)-11-2484500, (94)-11-2484600, (94)-11-2484700
ෆැක්ස් / பெக்ஸ் / Fax: (94)-11-2449823
වෙබ් අඩවිය / வெப் சைட் / Website: www.treasury.gov.lk

මගේ අංකය / எனது இல. / My No.: DFD/Cir/2015/1
ඔබේ අංකය / உமது இல. / Your No.:
දිනය / திகதி / Date: 2015-03-06

பொது முகாமையாளர் - இலங்கை வங்கி
பொது முகாமையாளர் - மக்கள் வங்கி
பொது முகாமையாளர் - பிரதேச அபிவிருத்தி வங்கி
பொதுமுகாமையாளர் - லங்காபுத்ர அபிவிருத்தி வங்கி

கனம் ஐயா

**<u>வரவு செலவுத்திட்டப் பிரேரணை 2015 – அரச வங்கிகளில் பெற்ற விவசாயக் கடன்களுக்கான சலுகைகள் வழங்குதல்</u>**

நீங்கள் அறிற்ததற்கிணங்க 2015 இடக்கால வரவு செலவுத்திட்டத்தில் முன் மொழியப்பட்டதற்கிணங்க விவசாயிகள் பெற்ற கடன்களில் 50 வீதத்தை கழிவு செய்வதற்கு அரசு தீர்மாணித்துள்ளது. விவசாயிகளினால் கட்டுப்படுத்த முடியாத காரணங்களான் வெள்ளம், வரட்சி, பீடைகள், இயற்கை, அழிவுகள், சிவில் பிணக்குகள் போன்ற காரணங்களால் விவசாயிகளினது பயிர்கள் அழிவுக்குற்பட்டதனால் அரசு மேற்படி தீர்மாணங்களை மேற்படி தீர்மாணங்களை மேற் கொண்டது. இதன்படி வங்கிகள் தரப்பட்டுள்ள செயற்பாட்டு வழிமுறைகளின் படி 2015-02-01 ம் திகதியிலிருந்து செயலாற்றுமாறு வேண்டப்படுகிறது.

1. விவசாயிகள் நெல் உற்பத்திக்காகவும், ஏனைய பயிர் வகைகளின் உற்பத்திக்காகவும் பெற்ற ரூபா 100,000/= வரையிலான கடன்கள் 2015 ஜனவரி 31 ம் திகதிக்கு அல்லது அதற்கு முன்னர் செயற்படா நிலைக்கு மாற்றப்பட்டிருற்தால் அவை இச் சலுகைப் பொதிக்கு உற்படும்.

2. ஒரே வங்கியில் விவசாயிகள் பெற்ற கடன்கள் எத்தனையாக இருப்பினும் மொத்தமாக 100,000 ரூபாய்க்கு மேலதிகமான தொகை இச் சலுகை கைத் திட்டத்தின் கீழ் கவனத்திற் கொள்ளப்பட மாட்டாது.

3. ஒட்டு மொத்த அல்லது தனியான கடன்களின் தொகை ரூபா 100,000 ஐ தாண்டினால் இச் சலுகைப் பொதிக்குள் அடங்க மாட்டாது.

4. வங்கியானது மொத்த மூலதனக் கடனில் 50 வீதத்தைக் பதிவழிப்பதோடு அத்தொகை திறைசேரியினாலுரிய வங்கிகளுக்கு வழங்கப்படும்.

5. மேலதிகமாக அறவிடப்பட்ட வட்டித்தொகை வங்கியினால் பதிவழிக்கப் படுவதோடு அத்தொகை நட்டத்தை வங்கிகள் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும்.

6. வங்கியால் பதிவழிக்கப்பட்ட மூலதனக் கடன் தொகை பற்றிய விபரங்கள் நவ்வொரு மாதமும் அபிவிருத்தி நிதித் கூட்டுத் தாபனத்துக்கு வங்கியின் உள்ளகக் கணக் காய்வாளரின் சிபாரிசுடன்

அனுப்பப் படுவதோடு அதற் கடுத்த மாத முதல் வாரத்தில் நிதி அமைச்சு அத் தொகையை உரிய வங்கிகளுக்கு அனுப்பி வைக்கும்.

7. இச் சலுகை விபரங்கள் பற்றி வாடிக்கையானருக்கு வங்கிகள் த்னித்தனியே அறியப் படுத்தல் வேண்டும்.

8. 2015 - மார்ச் மாதம் 10 ம் திகதிக்கு முன்னர் அனைத்து வங்கிக் கிளைகளுக்கும் உள்ளகச் சுற்று நிருபமொன் றினூடாக அறியப்படுத் தல் வேண்டும்.

இது பற்றிய உங்களது மேலான ஒத்துழைப்பு மெச்சப் படுகிறது.

ஒப்பம் ;- கலாநிதி சமரதுங்க,

திறைசேரிச் செயலாளர் மற்றும்
நிதி அமைச்சின் செயலாளர்

பிரதி : பணிப்பாளர் - வங்கி மேற்பார்வை, இலங்கை மத்திய வங்கி
பணிப்பாளர் - பிரதேச அபிவிருத்தித் திணைக்களம், இலங்கை மத்திய வங்கி
பணிப்பாளர் நாயகம் - வரவு செலவுத் திட்டத் திணைக்களம்
பணிப்பாளர் நாயகம் - திறைசேரி செயற்பாடுகள் திணைக்களம்
} அ. கொ. பொ.